செ.வெ.எண்-13 நாள்-06.10.2018

# பத்திரிக்கைச் செய்தி.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, சிறப்பு சுருக்கத் திருத்தம் - 2019 ஐ முன்னிட்டு, அரியலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் **07.10.2018** அன்று வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம் செய்தல் மற்றும் அனைத்து வகையான திருத்தம் செய்வதற்கான 3-ஆம் கட்ட சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் விரிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட சிறப்பு முகாம் பணிகளை கண்காணித்திடும் பொருட்டு, துணை ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் நிலையிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, எதிர்வரும் **13.10.2018** அன்று பொதுமக்கள் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை சரிபார்த்திடும் பொருட்டு, சிறப்பு கிராம சபை கூட்டமும், **14.10.2018** அன்று 4-ஆம் கட்ட சிறப்பு முகாமும் நடைபெற உள்ளது. பொதுமக்கள் மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**